**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, GOBICHETTIPALAYAM**

**Case No.CC.89/2015**

**அரசு தரப்பு சாட்சி : PW1**

**NAME :** விஸ்வநாதன் **AGE:**

**FATHER'S NAME :** **Address:**

**VILLAGE:**

**TALUK:**

SOLEMNLY AFFIRMED IN ACCORDANCE WITH THE PROVISIONS OF OATHS ACT OF 1969 r/w. RULE 35 OF CRIMINAL RULES OF PRACTICE 2019 THE DAY OF 10.11.2025

(1, 4 எதிரிகள் ஆஜர். 3ம் எதிரி மனுப்படி ஆஜரில்லை. எதிரிகள் தரப்பு வழக்குரைஞர் ஆஜர்.)

**அரசு தரப்பு முதல் விசாரணை தொடர்ச்சி:**

1. 11.08.2005 சுப்பிரமணியம் என்பவர் என்னிடமிருந்து ரூ.1,25,000/– கடன் வாங்கியதற்கு ரூ.1,00,000/–த்திற்கு நோட்டரி முன்பாக எழுதிக்கொடுத்த **உறுதிமொழிப்பத்திரம் அ.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது ( அ.சா.ஆ.5 ஆவணம் 1ம் எதிரி வழக்கறிஞர் அதில் உள்ள கையொப்பம் 1ம் எதிரியின் கையொப்பம் இல்லை , போலியாக தயாரிக்கப்பட்டுள்ளது என 1ம் எதிரி வழக்கறிஞரின் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது).

2. சுப்பிரமணியம், முருகேசன் ஆகிய இருவரும் எனக்கு ஏற்கனவே அறிமுகமான கல்யாணசுந்தரம் என்பவர் எனது அரிசி ஆலைக்கு அவர்களை அழைத்து வந்தார். அப்போது, ஏற்கனவே சுப்பிரமணியம், முருகேசனிடம் ரூ.4,00,000/– கடன் வாங்கியிருந்தார். அவர் கடனை திருப்பிக்கொடுக்காததால் சுப்பிரமணியம், என்னிடம் அனுசரணையாக இருப்பதால், நீங்கள் சுப்பிரமணியத்திடம் சொல்லி மேற்படி தொகையை வாங்கித்தருமாறு முருகேசன் என்னிடம் சொன்னார். **முருகேசன்,**

**சுப்பிரமணியத்திற்கு எழுதிக்கொடுத்த ஆவணம் அ.சா.ஆ.6** ஆகும். ( அ.சா.ஆ.6 ஆவணம் 1 முதல் 4 எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்கள் அதில் சாட்சிக்கையொப்பம் அவர்களுக்கு வழங்கப்பட்ட நகல்களில் இல்லை என்றும், பின்னிட்டு போடப்பட்டதாக ஆட்சேபணை தெரிவித்ததால் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது). **10.09.2004 தேதியிட்ட இரசீது அ.சா.ஆ.7 ஆகும்.** அதில் உள்ள கையொப்பம் எனது மனைவின் கையொப்பம் அல்ல. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை:**

(எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்களின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)

இந்நீதிமன்றத்தில் பகிரங்கமாக சாட்சி சொல்ல என்னால் சொல்லப்பட்டு தட்டெழுத்தரால் கணிணியில் பொறிக்கப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

**குற்றவியல் நடுவர் எண்.1**
**கோபிசெட்டிபாளையம்**